உ

சிவமயம்.

அருணகிரிநாதர்

அருளிச்செய்த

# கந்தரநுபூதி.

இஃது

அ[illegible]வ

கந்தசாமி முதலியாரவர்களது

சென்னை,

ஸ்ரீ லக்ஷ்மிவிலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1900.

உ

கணபதி துணை

# கந்தரநுபூதி.

## காப்பு

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்

## நூல்

மரயானை அநுசரிக்க

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே. (க)

வணங்காரைத் தண்டிக்க

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ
வெல்லா மறவென் னையிழந் தநலஞ்
சொல்லாய முருகா சுரபூ பதியே. (உ)

கலவியினை மெச்ச.

வானோ புனல்பார் கனன்மா ருதமோ, ஞானோ தயமோ நவினான் மறையோ, யானோ மனமோ வெனையாண் டவிடந், தானோ பொருளா வதுசண் முகனே. (௩)

துறவு பெற

வளைபட் டகைமா தொடுமக் களெனுந், தளைபட் டழியத் தகுமோ தகுமோ, கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந், தொளைபட் டுருவத் தொடுவே லவனே. (௪)

மாயையை ஒழிக்க.

மகமா யைகளைந் திடவல் லபிரான், முகமா றுமொழிந் துமொழிந் திலனே, அகமா டைமடந் தையரென் றயருஞ், சகமா யையுணின் றுதயங் குவதே (௫)

மாதரைத் தழுவ.

திணியா னமனோ சிலைமீ துனதா
ளணியா ரரவிந் தமரும் புமதோ

பணியா வெனவள் ளிபதம் பணியுந் தணியா வதிமோக தயாபரனே. (௬)

தீராப்பிணி தீர

கெடுவாய் மனனே கதிகேள் கரவா, திடுவாய் வடிவே லிறைதா ணினைவாய், சுடுவாய் நெடுவே தனைதூ ளபடவே, விடுவாய் விடுவாய் வினையா வையுமே. (௭)

குடிகளைத் தன்வசமாக்க

அமரும் பதிகே ளகமா மெனுமிப், பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா, குமரன் கிரிரா சகுமா ரிமகன், சமரம் பொருதா னவநா சகனே. (௮)

பெண்ணாசை ஒழிக்க

மட்டூர் குழன்மங் கையர்மை யல்வலைப், பட்டூ சல்படும் பரிசென் றொழிவேன், தட்டூ டறவேல் சயிலத் தெறியும், நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே. (௯)

நமனை விலக்க.

காரமா மிசைக்கா லனவரிற் கலபத்
தேரமா மிசைவந் தெதிரப் படுவாய்
தாரமார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூரமா மடியத் தொடுவே லவனே (௰

தனிமை போக்க.

கூகா வெனவென் கிளைகூ டியழப்,
போகா வகைமெய்ப் பொருள்பே சிய
வா, நாகா சலவே லவநா லுகவித்,
தியாகா சுரலோ கசிகா மணியே. (௧௧)

களவு வெல்ல

செம்மான் மகளைத் திருடுந் திரு
டன், பெம்மான் முருகன் பிறவா னிற
வான், சும்மா விருசொல் லறவென்
றலுமே, யம்மா பொருளொன் றுமறி
ந் திலனே. (௧௨)

இருள் வழி நடக்க.

முருகன் றனிவேன் முனிநங் குரு
வென் றருள்கொண் டறியா ரறியுந்
தரமோ, வுருவன் றருவன் றுளதன

இலதன்று, இருளன் றொளியன் றென நின்றதுவே. (கங)

பாததரிசனஞ் செய்ய

கைவாய் கதிர்வேல் முருகன் கழல் பெற்று, உய்வா யனனே யொழிவா யொழிவாய், மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம், ஐவாய் வழிசெல் லுமவா வினையே. (கச)

அட்டாவதானஞ் செய்ய

முருகன் குமரன் குகனென்று மொழிந்து, உருகுஞ் செயறந் துணர்வென் றருள்வாய், பொருபுங் கவரும் புவியும் பரவுங், குருபுங் கவவெண் குணபஞ் சரனே. (கரு)

பேராசை விலக்க

பேராசையெனும் பிணியிற் பிணிபட், டோரா வினையே னுழலத் தகுமோ, வீரா முதுசூர் படவே லெறியுஞ், சூரா சுரலோக துரந்தரனே ( )

நன்னடத்தை மேன்மையாக.

யாமோதிய கல்வியு மெம்மறிவுந்,
தாமே பெறவே லவர்தந் ததனாற், பூ
மேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்,
நாமே னடவீர் நடவீ ரினியே. (கஎ)

கர்ப்பழியாதிருக்க.

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
வதிகா வலசூ ரபயங் கரனே. (கஅ)

இல்வாழ்க்கை நீங்க

வடிவுந் தனமும் மனமுங் குண
முங், குடியுங் குலமுங் குடிபோ கிய
வா, வடியந் தமிலா வயில்வே லரசே,
மிடியென் றொருபா விவெளிப் படி
னே. (க௯)

அனுக்கிரகம் பெற.

அரிதாகிய மெய்ப் பொருளுக் கடியே
னுரிதா வுபதேச முணர்த்தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே. (௨0)

திருவடி வணங்க.

கருதாமறவா நெறிகாணவெனக்
கிருதாளவனசந் தரவென்றிசைவாய
வரதாமுருகா மயில்வாகனனே
விரதாசுரசூ ரவிபாடணனே. (உக)

தவம் பெற

காளைக்குமரே சனெனக்கருதித்
தாளைப்பணியத் தவமெய்தியவா
பாளைக்குழல்வள் ளிபதம்பணியும்
வேளைச்சுரபூ பதிமேருவையே (உஉ)

சலிகை சொல்ல.

அடியைக் குறியா தறியா மையி னான, முடியக் கெடவோ முறையோ முறையோ, வடிவிக் ரமவேள் மகிபா குறமினை, கொடியைப் புணருங குணபூ தரனே (உ௩)

மாதர்வலையில் அகப்படாதிருக்க.

கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே, சேர்வே னருள்சே ரவு மெண்ணுமதோ, சூர்வே ரொடுகுன்

றுதொளைத்த நெடும், போர்வே லபுரந் தரபூபதியே. (உச)

மகாவினை ஒழிக்க.

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந், தையோ வடியே னலையத் தகுமோ, கையோ வயிலோ கழலோ முழுதுஞ், செய்யோய மயிலே றியசே வகனே. (உரு)

யாருமற்றவர்க்கு ஆதாரமாக.

ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவினோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே. (உசு)

பாக்கியத்தை விதிவழி அனுபவிக்க.

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயா, னென்னே விதியின் பயனிங் கிதுவோ, பொன்னே மணியே பொருளே யருளே, மன்னே மயிலே றியவா னவனே. (உஎ)

தான அவனுக.

ஆனா வமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானா யநிலை நின்றது தற்பரமே. (உஅ)

கடவுண்முன் கோபமாற்ற.

இல்லே யெனுமா யையிலிட் டனைநீ பொல்லே னறியா மைபொறுத் திலையே, மல்லே புரிபன் னிருவா குவிலென், சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே. (உகூ)

வழக்குப் பேச.

செவ்வா னுருவிற் றிகழ்வே லவன, றொவ்வா ததெனவுண் ணர்வித் ததுதா, னவ்வா றறிவா ரறிகின் றதலா, லெவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. (௩0)

கடவுள்முன்னிலையில ஞானம்பெற.

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே

தாழ்வானவை செய்தன தாமுளவோ
வாழ்வாயினி நீ மயில்வாகனனே. (௰௧)

கொலை மறுக்க.

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடுவாகையனே. (௰௨)

வியாகுலம் ஒழிக்க.

சிந்தா குலவில் லொடுசெல் வமெ
னும், விந்தா டவியென் றுவிடப் பெ
றுவேன், மந்தா கினிதந் தவரோ தய
னே, கந்தா முருகா கருணா கரனே. ()

பெண்களைத் தாயாக நினைக்க.

சிங்கார மடந் தையர்தீநெறிபோய்
மங்காமலெனக் குவரந்தருவாய்
சங்க்ராமசிகா வலசண்முகனே
கங்காநதிபா லகிர்பாகரனே. (௰௪)

சரீரவாஞ்சை ஒழிக்க.

விதிகா ணுமுடம் பைவிடா வினை
யேன், கதிகா ணமலர்க் கழலென் றரு
ள்வாய், மதிவா ணுதல்வள் ளியை

யல் லதுபின், றுநியா விரதா சுரபூ
பதியே. (கரு)

சடவுலைக நாண.

காதா குமரா நமவென் றரனு; ரோ
தா யெனவோ தியதெப பொருடான்,
வேதா முதல்வின ணவர்சூ மலர்ப,
பாதா குறமின் பதசே கரனே. (கசா)

தனது அகந்தையை ஒழிக்க.

கிரிவாயவிடுவிக் கரமவேளிமையோா
பரிவாரமெனும் பதமேவலேயே
புரிவாய்மனனே பொறையாமறிவா
லரிவாயடியோடு மகநதையையே (கஎ)

பிசாசம ஒழிக்க

ஆதாளியையொன் றறியேனையறத்
தீதாளியையாண் டதுசெபபுமதோ
கூதாளகிரா தகுலிக்கிறைவா
வேதாளகணம புகழுவேலவனே.(கஅ)

ஜனனம் எடாதிருகக.

மாவேழ் சனனங் கெடமா யை
விடா, மூவே டணையென் றுமுடிந
திடுமோ, கோவே குறமின் கொடி

தோள் புணர்ந்த, தேவே சிவசங் கரதே
சிகனே. (௩௯)

மாயை தெரிய.

வினையோ டவிடுங் கதிர்வேன் மற
வேலா, மனையோ டுதியங் கியமங் கிட
வோ, சுனையோ டருவித் துறையோ
டுபசுந், தினையோ டிதணோ டுதிரிந்
தவனே. (௪௦)

நிரதிசயசுகம் பெற

சாகாதெனையே சரணங்களிலே
காகாநமனார் கலகஞ்செயுநாள்
வாகா முருகா மயில்வாகனனே
யோகாசிவஞா னோபதேசிகனே. (௪௧)

நினைவற்ற நிலை.

குறியைக் குறியா துகுறித் தறியும்,
நெறியைத் தனிவே லைநிகழ்த் திட
லுஞ், செறிவற் றுலகோ டுரைசிந்
தையுமற், றறிவற் றறியா மையுமற
றதுவே. (௪௨)

ஆசானாகி அனுக்கிரகிக்க.

தூசாமணியுந் துகிலும்புனைவா
ணேசா முருகா நினதன்பருளா

ஆசாநிகளந் துகளாயினபின்
பேசாவநுபூதிபிறந்ததுவே. (௪௩)

குருமந்திரம் பெற

சாடுந்தனிவேல் முருகன்சரணஞ்
சூடும்படிதந் ததுசொல்லுமதோ
வீடுஞ்சுரர்மா முடிவேதமும்வெங்
காடும்புனமுங் கமழுங்கழலே. (௪௪)

கல்வியில் சமபாஷிக்க.

கரவா கியகல் வியுளார் கடைசென்,
றிரவா வகைமெய்ப் பொருளீ குவை
யோ, குரவா குமரா குலிசா யுதகுஞ்,
சரவா சிவயோ கதயா பரனே. (௪௫)

மனவருத்தந்தீர.

எந்தாயுமெனக் கருள்தந்தையுநீ
சிந்தாகுலமா னவைதீர்த்தெனையாள்
கந்தாகதிர்வே லவனேயுமையாண்
மைந்தாகுமரா மறைநாயகனே (௪௬)

ஆனந்தநடனங்காண

ஆறாறையுநீத் ததன்மேனிலையைப்
பேறாவடியேன் பெறுமாறுளதோ
சீறாவருசூர் சிதைவித்திமையோர்
கூறாவுலகங் குளிர்வித்தவனே (௪௭)

சற்சொரூபங் காண.

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறுமே லவனே.

தன்னை அறிந்துகொள்ள.

தன்னந் தனிநின் றதுதா னறிய, வின்னும் மொருவர்க் கிசைவிப் பதுவோ, மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார், கின்னங் களையுங் க்ருபை சூழ் சுடரே. (௪௯)

அக வறுக்க

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவே
னதிபுத் திரஞா னசுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே. (௫0)

நினைத்தபடி தரிசனங் கொடுக்க.

உருவா யருவா யுளதா யிலதாய் மருவாய் மலராய மணியா யொளி யாயக், கருவா யுயிராயக் கதியாய விதியாய்க், குருவாய் வருவா யருள வாய குகனே. (௫௧)

முற்றும்.